# DEPOSITION OF WITNESS
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, TIRUMANGALAM**

**Case No: CC.539/2022**
**Prosecution Witnesses : 2**

| | | | |
|---|---|---|---|
| Name | : கருப்பசாமி | Caste | : |
| Father 's Name | : மூர்த்தி | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

**(1 முதல் 3 எதிரிகள் ஆஜர். எதிரி தரப்பில் வழக்கறிஞர் ஆஜர் இல்லை)**
**19.05.2025**
**முதல் விசாரணை**

நான் திருமங்கலத்தில் குடியிருந்து வருகிறேன். வெல்டிங் கடையில் பணி செய்து வருகிறேன். அ.சா.1 கடையில் தான் நான் பணி செய்து வருகிறேன். கடந்த 2021வது வருடம் தேதி மாதம் நினைவில்லை. இரவு 2.00 மணியளவில் திருமங்கலம் பி.சி.எம் நகரில் உள்ள அ.சா.1ன் கடையில் வேலை முடித்துவிட்டு நாங்கள் படுத்திருந்த போது சத்தம் கேட்டது. அ.சா.1 அங்கே வந்திருந்தார். எங்கள் கடைக்கு வரும் வயரை திருட முயற்சி செய்ததாக தெரிய வந்தது அவர்கள் யார் என்று எனக்கு தெரியவில்லை. ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியாது. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**அரசு தரப்பில் சாட்சி பிறழ் சாட்சியாக அனுமதி கோரி அனுமதி வழங்கப்பட்டதன் பேரில் குறுக்கு விசாரணை:**

கடந்த 20.11.2021 அன்று அ.சா.1 அவரது கடையில் இருந்த போது இரவு 3.30 மணியளவில் அவரது கடைக்கு வரக்கூடிய மின்சார வயரை மூன்றாவது எதிரி நவீன் என்ற கும்பகர்ணம் இ.பி போஸ்டில் ஏறி அதை திருட முயற்சி செய்தார் என்றும் அ.சா.1 சத்தம் போட்டதும் அதிலிருந்து கீழே இறங்கி TN 58 BZ 4663 என்ற இருசக்கர வாகனத்தில் காத்துக்கொண்டிருந்த சட்ட முரணான இளஞ்கதிர் என்ற இளங்கு என்பவர், குருநாதன் என்ற பாலகுருநாதன், நவீன் என்ற கும்பகர்ணன் ஆகிய அனைவரும் சேர்ந்து மேற்கண்ட இருசக்கர வாகனத்தில் தப்பி செல்ல முயன்றவர்களை நானும்

அ.சா.1, சாட்சி சதீஸ்குமாரும் கையோடு அவர்களையும் அவர்களது இருசக்கர வாகனத்தையும் காவல் நிலையத்தில் ஒப்படைத்து சம்பவம் பற்றி அ.சா.1 புகார் கொடுத்தார் என போலீசார் விசாரணையில் கூறிவிட்டு தற்போது மாற்றி பொய் சாட்சியம் அளிக்கின்றேன் என்றால் சரியல்ல.

**எதிரிகள் தரப்பில் கு.வி: இல்லை**

**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, TIRUMANGALAM**

**Case No: CC.539/2022**
**Prosecution Witnesses : 1**

| | | | |
|---|---|---|---|
| Name | : முருகேசன் | Caste | : |
| Father 's Name | : பெரியசாமி | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

**(1 முதல் 3 எதிரிகள் ஆஜர். எதிரி தரப்பில் வழக்கறிஞர் ஆஜர் இல்லை)**
**19.05.2025**
**முதல் விசாரணை**

நான் திருமங்கலத்தில் குடியிருந்து வருகிறேன். வெல்டிங் கடை வைத்து நடத்தி வருகிறேன். கடந்த 2021வது வருடம் தேதி மாதம் நினைவில்லை. இரவு 3.00 மணியளவில் திருமங்கலம் பி.சி.எம் நகரில் உள்ள எங்களது கடையில் வேலை முடித்துவிட்டு நாங்கள் படுத்திருந்த போது எங்களது கடைக்கு வரும் இ.பி வயரை ஒரு நபர் கீழே இருந்து கொண்டு மேலே ஒரு நபர் அந்த வயரை கட் பண்ண முயற்சி செய்தார். நான் யார் என்று கேட்டதற்கு அவர் கீழே குதித்து இரண்டு பேரும் ஓடிவிட்டார்கள். எனது கடையில் இருந்த சதீஸ்குமார் மற்றும் கருப்பசாமியும் மற்றும் நானும் சென்று அவர்களை விரட்டி கொண்டு சென்றோம் ஆனால் பிடிக்க முடியவில்லை. எனவே மறுநாள் காலை காவல் நிலையம் சென்று சம்பவம் பற்றி புகார் கொடுத்தோம். என்னிடம் காண்பிக்கப்படும் புகார் நான் கொடுத்த புகார் இல்லை. புகாரில் உள்ள கையெழுத்து தன்னுடையது இல்லை. ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியாது. போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**அரசு தரப்பில் சாட்சி பிறழ் சாட்சியாக அனுமதி கோரி அனுமதி வழங்கப்பட்டதன் பேரில் குறுக்கு விசாரணை:**

கடந்த 20.11.2021 அன்று நான் எனது கடையில் இருந்த போது இரவு 3.30 மணியளவில் எனது கடைக்கு வரக்கூடிய மின்சார வயரை மூன்றாவது எதிரி நவீன் என்ற கும்பகர்ணம் இ.பி போஸ்டில் ஏறி அதை திருட முயற்சி

செய்தார் என்றும் நான் சத்தம் போட்டதும் அதிலிருந்து கீழே இறங்கி TN 58 BZ 4663 என்ற இருசக்கர வாகனத்தில் காத்துக்கொண்டிருந்த சட்ட முரணான இளஞ்கதிர் என்ற இளங்கு என்பவர், குருநாதன் என்ற பாலகுருநாதன், நவீன் என்ற கும்பகர்ணன் ஆகிய அனைவரும் சேர்ந்து மேற்கண்ட இருசக்கர வாகனத்தில் தப்பி செல்ல முயன்றவர்களை நாங்கள் கையோடு அவர்களையும் அவர்களது இருசக்கர வாகனத்தையும் காவல் நிலையத்தில் ஒப்படைத்து சம்பவம் பற்றி நான் புகார் கொடுத்தோன் என போலீசார் விசாரணையில் கூறிவிட்டு தற்போது மாற்றி பொய் சாட்சியம் அளிக்கின்றேன் என்றால் சரியல்ல.

**எதிரிகள் தரப்பில் கு.வி: இல்லை**